தமிழ்
மருத்துவப் பொழில்

திங்கள் வெளியீடு.

மலர் 1	அக்டோபர், 1941	இதழ் 9

இளைப்பு நோய்

(ஆசிரியர் : மாங்காடு – வடிவேலு முதலியார்)

இவ்வாறு ஒப்பாகச் சொன்னதன் விளக்கம் வருமாறு :

1. சுரம் மந்திரி என்பதன் விளக்கம்.

ஓரரசனிடத்தில் இருக்கும் மந்திரியானவன் அரசனை விட்டுப் பிரிய அவசியமான காலந்தவிர மற்ற எல்லாக் காலங்களிலும் மணி மணிக்கும் நிமிடம் நிமிடத்திற்கும் விநாடிவிநாடிக்கும் அவனுக்கு "மந்திரிக்கழகு வரும்பொருளுரைத்தல்" என்று வெற்றிவேற்கையிற் சொல்லப்பட்டபடி பின்நடக்கப் போகிற காரியங்களை யெல்லாம் அப்போதைக்கப்போது எடுத்துச் சொல்லிக்கொண்டு அவனைவிட்டு நீங்காமலிருப்பான்.

அதுபோலவே சுரமானது மற்ற வாத பித்த வேளைகளில் வெளிக்குக் காணப்படாமல் மறைந்திருந்து ஐயவேளையாகிய மாலை இரவுகளில் தன்னை விட்டுப் பிரியாமல் அழற்றிக்கொண்டிருக்கும்.

ஆகையால் சுரம் மந்திரியாயிற்று

2. இரைப்புநோய் உடன் பிறந்தார் என்பதன் விளக்கம்.

ஒருவனுக்குக் குணமாறுபாடில்லாத துணைவரான உடன் பிறந்தார்கள் தான் வாழும் இல்லத்திலேயே இருப்பாரானால் அவனுக்குடனிருந்து ஒத்துழைத்து வேண்டிய உதவிகளைச் செய்திருந்து அவனுடற்கோ ரழகையும் வன்மையையும் கொடுப்பார்கள்.

அதுபோலவே இரைப்பு நோயானது தான் வாழும் வீடாகிய கோழை யிருக்குமிடத்தை விட்டுப்பிரியாமல் அதனுடனிருந்து அவ்

விடத்தை வன்மைப்படுத்தி மூச்சு சரியாய் விடவொட்டாமற் பண்ணித்தடுத்துத்தடுத்துப் பெரு மூச்சாய் வந்து அந்நோய்க்கு அழகையும் வன்மையையுஞ் செய்யும்.

ஆகையால் இரைப்புத் துணைவர்களாயிற்று. ஈண்டு, இரைப்பென்பது சுவாசம். சுவாசம் ஒன்றாய் வராமற் பலவாய் வருவதால் துணைவர் எனப் பன்மையாற் கூறினர்.

இச்சுவாசத்தின் பெருமையையும் இது பலவாய் எழும்பும் என்பதையும் :

"சுவேத வாகனனென மைந்தனெனு மைந்தனைச்
சொர்க்கமெனு முத்தமாங்கத்
தோன்றலெனு மான்மத வலாரிதன் பகையான
சுவாசமாங் காலகேய
நிவாத கவசத்தவுணர் முப்பத்து மூன்றான
நிகழ்லக்க ரோமாகரை
நிமிடத்திலே கொன்று வேலிச் சரத்தினால்
நீறாக்கி யக்காலையே
சவாதுமண வாகைமா லிகைசூடி யமராபதி
தன்னிலொரு பவனிவந்து
சக்கரத் தந்தையுட னமுதபோ சனமுண்டு
தந்தைமகிழ்ந்த வேளை
துவாத சாதித்தரென வொளிருமணி மௌலிபணி
சொன்னவம் பரமு முதவிச்
சோதிக்கவே ரம்பை மாதைப் பணிக்கவவள்
சொல்லலியு மாயினனே"

எனத் தேரர் கூறியுள்ள மருத்துப் பாரதச் செய்யுளாலறிக.

3. காமாலை பெண்டிர் என்பதன் விளக்கம்.

ஒருவற்கு இல்லாளானவள் தக்கவளாயின் அவன் செல்வனுயுள்ள காலத்து உண்டுடுத்தி மகிழ்ந்தும், அவன் வறியனான காலத்தில் பட்டினியிருக்க நேர்ந்தால் அவ்வாறிருந்து இளைத்தும் அவனை விட்டு நீங்காதிருப்பள்.

அதுபோலவே காமாலையானது உணவாதிகள் கொடுத்து உபசரிக்கக் கண்ணில் இரத்தம் முதலியவற்றைக் காட்டிச் செழிப்பைக் காட்டியும் அஃதில்லாவிடின் இரத்தங்குறைந்து அழகு முதலியவை குறைந்தும் தன்னை விட்டுப் பிரியாமலு மிருக்கின்றது.

ஆகையால் காமாலை பெண்டிராயிற்று.

4. கோழை குடியிருக்கும் புரிசை யென்பதன் விளக்கம்.

மக்கட்கு வரும் ஒவ்வொரு நோயும் தான் வாழ்தற்குரியவோர் இடத்தைப்பெற்றே வருமேயொழிய. இடமின்றி வராது. ஆகையால் இளை

ப்பு நோயானது கோழையை இடமாகக் கொள்ளாவிடின் தான் சில நாள்களும் இருந்து வாழ முடியாது. ஆகையால் சுவாசாசயத்திற் சேரும் கோழையையே தனக்கு இடமாகக் கொண்டது.

அவ்வாறு அது கொள்ளாவிடின் உடல் இளைத்தற்கு வழி யில்லையாகும். எங்ஙனமென்றால் அக்கோழையும் அதற்குக் காரண மான நீருமே அவ்விளைப்பைத் தரற்குரியன வென்பதாலென்க. இதனை :

"விடங்கிய வையங்கேள் மேலிரைப் பேற்றிடும்
அடங்கிச் சுரங்காயு மளவற்ற கோழைநீர்
தடங்கி யிருமிடும் தனிவிலா விரண்டு நோம்
இடங்கியுடல் வற்றி யிரத்தமுங் கக்குமே"

எனத் திருமூலரும்,

"ஆயிர நயனன்மெய் யானையி னிறமே
ஆஅ மிருமலு மூளைவு மசதியும்
ஆஅ தாளி வாயுளறல் வேதாள நோய்
ஆயாச மேற்சுவாச மீதாகும்' எனத் தேரரும் புகன்றுள்ள வற்றாலறிக.

5. பாண்டு படைத்தலைவன் என்பதன் விளக்கம் :

சேனாபதியாகிய படைத்தலைவனானவன் அரசனின் தேர், யானை குதிரை, காலாள்களாகிய நால்வகைப் படைகளுக்குந் தலைவனாக விருந்து அவைகளைச் செலுத்தவேண்டிய நெறியிற் செலுத்தித் தன்வன்மை கெடினும் அரசனையும், மற்ற மிகுதியிருக்கும் படை களையும் விட்டுப் பிரியாமலிருப்பன்.

அதுபோலவே பாண்டு என்னும் வெண்மை நோயானது எழுஉட ற்கட்டுகளி லொன்றாக விருந்து மற்ற ஆறுடற்கட்டுகளுக்கும் வன்மை யைக் கொடுத்துக் கொண்டிருக்கும் குருதியானது கெட்டகாலத்துத் தன் செழிப்பு குறைந்துவிட்டாலும் தான் அவ்விளைப்பைவிட்டுப் பிரி யாமலிருக்கும்.

ஆதலால், பாண்டு படைத்தலைவனாயிற்று

6. மந்தம் காலாட்படை என்பதன் விளக்கம் :

காலாட்படையானது மற்ற படைகளின் வன்மைகெட்ட காலத் தும் உடனிருந்து அரசனைக் காக்கும். அதுபோல மந்தமானது குடலில் கோழை மிகுதியினால் பசித்தீ கெட்டு வன்மை குறையுங் காலத்தும் அவ்விளைப்பினுடனேயே யிருக்கும்.

ஆகையால் மந்தம் காலாட்படை யாயிற்று.

"பார்க்குங்கால் வாதம் பழமலமே பாதிக்கும்
சேர்க்கும் பயித்தியமோ தீபனமாம் — ஆர்க்குந்தான்
சேத்துமம சீரணமு மந்தமுமாஞ் சேயிழையே
பாத்தநா டிக்கதியின் பண்பு"

என்னும் வெண்பாவால் மந்தம் ஐயத்தாலுண்டா மென்பதை நன்றுயறிதல் வேண்டும்.

7. வாந்தி குதிரைப்படை யென்பதன் விளக்கம்:

குதிரைப்படையானது மூன்றுவதணியி லிருந்து உழைப்புக் கஞ்சாமல் தாம்தம் வாயால் நுரை முதலியவற்றை வெளிப்படுத்தி யேனும் அவ்வரசனைக் காத்து மற்ற படைகளை விட்டு அகலாதிருக்கும்.

அதுபோலவே வாந்தியானது சுரம், குளிர், வாந்தி என்னும் வரிசையில் மூன்றுவதாக விருந்து அந்நோயாகிய வரசனுக்குவன்மையைச் செய்துகொண்டு கடைவரைக்கும் பிரியாமலிருக்கும்.

ஆகையால் வாந்தி குதிரைப்படை யாயிற்று.

8. இரத்த பித்தம் சுதன் என்பதன் விளக்கம்:

ஒருவற்கு மைந்தனானவன் உடனிருந்து அவனுடைய கல்வி முதலியவற்றிற்கு வேண்டிய செல்வத்தைத் தந்தையிடமிருந்து பெற்றுத்தந்தை வறியனாயினும் கடைவரைக்கும் அவனைப் பிரியாமலிருப்பன்.

அதுபோலவே இரத்தபித்தமானது இளைப்புநோயினிடமிருந்து அடிக்கடி மேல்நோக்கிய ஓட்டத்தால் மூக்கிலும், செவியிலும், கண்ணிலும், வாயிலும், கீழ்நோக்கிய ஓட்டத்தால் ஆண்குறியிலும் கீழ்வாயிலும் (கீழ்வாய் — பவ்வீவழி) சரிஓட்டத்தால் மயிர்க்கால்களிலும், இரு ஓட்டத்தால் மேலுறுப்பு, கீழுறுப்புகளிலும் செம்புனல் வெளிப்பட்டு அரசாளும் நாடாகிய உடலைக் கிடைப்படுத்தி ஒழிக்கும்

ஆகையால் இரத்தபித்தம் சுதனாயிற்று.

இந்நோய் நான்கு ஓட்டங்க ளுடைய தென்பதை:

"அகலுநாசியி லுதிரமுறின் அதையே நசியஞ்செய்திடுவாய்
இகலுஞ் செவியிலுதிரமுறின் இதனைக் காதில் விடுவாயே
இதமாய்விழியி லுதிரமுறின் இதனைக் கண்ணில் விட்டிடுவாய்
பதமாய்த் தண்டிலுதிரமுறின் பதமாய்த் தண்டில் விட்டிடுவாய்
சதமாய் மயிர்க்காலுதிரமுறின் சதமாய் மேலிற் பூசிடுநால்
விதமாய்த் தோன்றும் ரத்தபித்தம் விட்டேயோடிப் போய் விடுமே"

என்பதனாலறிக.

இச்செய்யுளால் செம்புனல் பித்தமானது மேல்நோக்கு ஓட்டம் கீழ்நோக்கு ஓட்டம், ஈரோட்டம் சரியோட்டம் என்னும் நான்கு ஓட்டங்களை யுடையதென் றுணரவேண்டும்.

9. குளிர் காவலன் என்பதன் விளக்கம் :

உடற் காவலனனவன் அரசன் செல்லுமிடமெல்லாம் அவனை விடாது அவனுடன் சென்று அவனுக்கு யாதோர் இடுக்கணும் வாராமற் காப்பான்.

அதுபோலக் குளிரானது இளைப்பு நோயுடனிருந்து அஃது எவ்வெந்நோயிடம் சென்றாலும் அதை விடாது இருக்கும்.

ஆகையால், குளிர் காவலாளாயிற்று.

10. இருமல் புரோகிதன் என்பதன் விளக்கம் :

புரோகிதனனவன் ஒரு அரசனிடமிருந்து அவற்கு வேண்டிய நலங்களைச் சொல்லியிருந்து தனக்கு வேண்டிய பொருள்களைப் பெற்று அவன் வறியனாகும் வரை அவனைவிட்டுப் பிரியாமலிருப்பன். அதுபோலவே, இருமலானது இளைப்புநோயை விட்டுப் பிரியாமலிருந்து அந்நோய்க்கொரு நன்மை செய்வதுபோல் இருமி இந்நோயும் அது கொண்ட உடலும் அழியும்வரை இதனுடனிருக்கும்.

ஆகையாலிருமல் புரோகிதனாயிற்று.

11. அதிசாரம் சிவிகை என்பதன் விளக்கம் :

சிவிகையானது ஒரு அரசன் நால்வகைப் படைகளுடன் சென்று அரசமுறை செலுத்துங்கால் அப்படைகளுடன் சிவிகையுங் கூடவிருந்து அவ்வரையன் அயர்ந்த காலத்து அவனை ஏற்றிச்செல்லப் பயன்டுபவதாகும்.

அதுபோல அதிசாரம் என்னும் முற்பேதியானது இளைப்பு நோய் அரசாளும் நாடான உடலில் தன் வன்மையான உடற்கட்டுகள் தத்தம் நிலையிற் குறைந்த காலத்துக் குடலில் கோழை மிகும்போது வெளிப்படுவாகும்.

ஆகையால், அதிசாரம் சிவிகையாயிற்று.

12. இரங்கல் கேள்வி என்பதன் விளக்கம் :

ஓரரசன் அரசாளுங் காலத்தில் பலர் சொல்லும் பல பொருள்களை ஒலி வழியாகக் கேட்டல் வழக்காகும்.

அதுபோலவே இளைப்பு நோயாகிய அரசன் தன் நாடாகிய உடலை ஆளுங்காலத்தில் நெஞ்சில் கேட்கும் ஒலியாகும்.

ஆகையால் இரங்கல் கேள்வியாயிற்று.

13. வளி அரியணை என்பதன் விளக்கம் :

அரியணையானது ஓரரசனிருந்து அரசாளும் தனிப்பீடமாகும். அதுபோல அரசனாகிய இளைப்பு நோயானது தன் அரசாட்சியில்

துணையாயிருந்த நோய்ப் படைகளெல்லாம் அயருங்காலத்தில் வளி மாத்திரம் தனித்திருக்குங் குறியாகும்.

ஆகையால், வளி அரியணையாயிற்று.

வளியின் அளவை யுணர்த்தும் நாடி வெளிப்பட்டு அவ் வளியின் அளவை வெளிப்பட உணர்த்திக் கொண்டிருக்குமாயின் உடல் சில நாள் நிலைத்திருக்கும். ஆகலாற்றான், "எற்றிய வாதம் எழும்பிடில் மருந்துசெய்" எனத் திருமூலர் கூறியதும், உலகினர் வாதமிருக்கிறதா ? என்று கேட்பதூஉமாம்.

14. அழல் தலையணை என்பதன் விளக்கம் :

ஒரு அரசன் அரியணையிலிருந்து அரசாளினும் தான் அவ்வணை யில் சாயவேண்டிவரின் அதற்குப் பற்றுக்கோடாக வுள்ளது தலை யணையாகும். அதுபோல, இளைப்பு நோயானது வளியின் வன்மை யால் தொழில் செய்வதாயினும் அவ்வளியும் அழலின் வன்மையா லன்றிப் பயன்படாதாகும்.

ஆகையால், அழல் தலையணையாயிற்று.

இதனை: "பிதைக்கொண்ட வாதமும் பித்தமும் பெலனுமே" என்று திருமூலர் கூறியுள்ளதாலறிக.

பச்சைக்கர்ப்பூரம்

Dr. R. தியாகராஜன், L.1.M.

காரசாரம் இருபத்தைந்தனுள் ஒன்றாகிய இம்மணப்பொருள் இமவாலுகம், கதலியுப்பு, கெளித்தி பச்சை ,சசி சந்திரன், சோமனுப்பு சிதளம், சிதகர்ப்பூரம் ,பச்சைப்பூரம், பலிகை' பார்மகன்சாரி, பூரம்' மதி, மருவாளி, விந்தம், விரலிபச்சை, ரவிக்கஞ்சி, பச்சைக்கனசாரம்' என்ற வேறு பெயர்களினுலும் வழங்கப்படுகின்றது. இது கர்ப்பூர வாழைக்குள்ளே பொலுபொலென பொருமி நிற்குமென்றும், பெரு ங்காற்றில் பறந்து போகுமென்றும் நிர்மலமாய் எரிந்து போகு மென்றும் இதனை எடுத்து மிளகு இட்டு வாழை இலை கீழ்மேலிட்டு வளமாக பெட்டிக்குள் மருவி வைக்க வேண்டுமென்றும், குற்ற மில்லாத கண்ணிலிட்டால் கரைந்துபோகு மென்றும், உலோகங் களில் பட்டால் அரிச்சுப்போடு மென்றும், ரவிபட்டால் மாயமாகு மென்றும், வாசனையும் குளிர்ச்சியுமுடைய தென்றும், இதனுடைய பிறப்பு சேமித்து வைக்குமுறை சோதனை முறை முதலியனவற்றை மிக விளக்கமாகப் போகர் தம் 7000 ல் கூறியிருத்தல் காண்க.

இதில் பல பேதங்களுண்டெனினும் முக்கியமாய் எடுக்கப்பட்ட சாதி மூன்று. அவை:— (1) ஈசன் (2) வீமன் (3) பூதாச்சிறையன்

ஈசன் குணம் :

ஈசனென்னும் பூரம் வெண்மை யென்றறிவாய் காரமுமாம்
பேசரிய சீதமுஷ்ணம் பித்தமயல் — வீசுகின்ற
பீநச முட்டாகமிவை பேர்த்துவிடுங் காந்தி
யானத ஷ்வசிய மாம்.

(இ—ள்) வெளுப்பு, தளதளப்பு, காரமுடையைது, கபசுரம், பித்தம் மயக்கம், நாசிநோய், தாகரோகம் இவைகளைப் போக்கும். வசியத்துக்காகும்.

வீமன் குணம்:—

வீமனென்னுங் கர்ப்பூர மேகவெண்மை யாயிருக்குஞ்
சேமமுறுங் குளிர்ச்சி தின்றக்கா — ளுமருவு
நோயகலுந்தாகமறு நுண் பேதியுமாகும்
தூய மதி முகத்தாய் சொல்.

(இ—ள்) அழுக்கு வெண்மைகலந்த மேகநிறமுள்ள வீமனால், நாக்குமுள், தாக ரோகம் நீங்கும். தேக நலமும், குளிர்ச்சியும் அற்ப விரேசனமும் உண்டாம்.

பூதாச்சிறையன் குணம்:—

பூதாச்சிறைய னென்னும் பூரமஞ்சள் கைப்பாகும்
கோதை யர்க்காங் காசங் கொடு மேகம் — வாதாதி
என்னித் தனித்தோட மேறுமுத்தோடஞ் சொறியுந்
துன்னிரணம் போக்குஞ் சொல்.

(இ-ள்) மஞ்சள்நிறமும் கைப்புச் சுவையுமுள்ள பூதாச்சிறையனால் இருமல் அரித்திராமேகம் வாத பித்த கப தோடங்கள் திரிதோடம் நமை நெருங்கிய புண்கள் நீங்கும். பெண்களுக்கு உபயோகிக்கின்ற மருந்து களில் சேர்க்க நன்மை தரும்.

பச்சைக்கர்ப்பூரத்தின் போதுக்குணம் :—

அட்டகுன்மஞ் சூலை யணுகாது வாதமொடு
துட்டமேகப் பிணியுந் தோற்றுவே — மட்டலருங்
கூந்தன்முடி மாதே கொடிய கபம் போகுஞ்
சார்ந்தபச்சைக் கர்ப்பூரத் தால்.

(இ—ள்) பச்சைக்கர்ப்பூரத்தால் எண்வித குன்மங்கள், கீல்களில் குத்தல் வாதநோய் சிப்பிரமேகம் சிலேஷ்ம கோபம் நீங்கும். நிற்க,

"விரிந்துபார் பூரமுடன் வழலைதானும்
மேலான ஆகாச சூறுமாச்சு"

என்ற போகர் காரசாரத்திரட்டு 60–ல் கூறப்பட்ட தொடரினால் இது ஆகாசபூதச் சரக்கென்றும், "பூரத்தால் லிங்கஞ்சாகும்" 'சீன துக்கினமே பூரம்" என்ற தொடர்களினால் இதன் சத்துருச் சரக்கையும் மித்துருச்சரக்கையுமறியலாம்.

மற்றும், பச்சைக்கர்ப்பூரம் கைப்பு உப்புச்சுவைகளையும் சீதவீரியத்யைும் விறுவிறுப்பையுமுடையது. இதற்குச் சீதளகாரி பலகாரி கபஹரகாரி செய்கைகள் உள. இதனை 1-8 முதல் இரண்டரை அரிசிஎடைவரை உபயோகிக்கலாம்.

இச்சரக்கைச் செங்கழுநீர் புட்பச் சாற்றில் ஒரு நாழிகை பரியந்தம் ஊறவைத்தெடுத்து ரவியில் உலர்த்திக்கொள்ளச் சுத்தியாம். இதுவே கர்ப்பூரத்திற்கும் சுத்தி.

நிற்க இதன் உபயோகத்தினை ஆராய்வாம். இதை மற்றைய சரக்குகளுடன் கலந்தே உபயோகிக்கின்றனர். பச்சைக்கர்ப்பூரம் குங்குமப்பூ கிராம்பு வெற்றிலைக்காம்பு இவைகளை யரைத்துத் தாய்ப்பாலில கலந்து துணியில் நனைத்துச் சுரநோயினருக்கு நெற்றியிலிடச் சுரம் தணியும்.

பச்சைக்கர்ப்பூரம் அரை அயிசிடைையை ஒரு பலம் சந்தனக்குழம்பில் கலந்து மேலுக்கு உபயோகிக்க உடலுக்குக் குளிர்ச்சியையும் சிரங்கு, கோடையில் உண்டாம் வியர்வைகுரு உடல் எரிச்சல் முதலியவற்றையும் நீக்கும். இதனை உள்ளுக்குக் கொடுக்க வெள்ளை நோய் தணியும்.

பச்சைகர்ப்பூரம் கஸ்தூரி இரண்டையும்கலந்து வெப்பமூண்டாக்கியாகவும் கபவாத சுரம் காசம் சுவாசகாசம்முதலிய நுரையீரலைப்பற்றிய நோய்களுக்கு உபயோகித்தல் உண்டு.

பச்சைக்கர்ப்பூர வடகம் :— பச்க்கைர்ப்பூரம் 1, சந்தனத்தூள் 2 ஏலம் 3, அரத்தை 4, இகைளின் தூள்களை மேற்படி பங்குகளாய் நிறுத்தெடுத்துத் துளசிச்சாறு விட்டரைத்துச் சுண்டையளவு வடகஞ் செய்து நிழலில் உலர்த்திக் கொள்ளவும். இதைச் சுரம் இருமல் கீல்வாதம் இவைகளுக்கு ஒரு குளிகை வீதம் கொடுக்கவும்.

பச்சைக்கர்ப்பூர அஞ்சனக் குளிகை :— பச்சைகர்ப்பூரம் 1 சீரகம் 2 தேற்றான்கொட்டைச் சந்தனம்3 இவைகளைத் திரிபலைக்குடிநீரால் மைபோல் 2 அல்லது 3 நாள் அரைத்து நீண்ட குளிகையாகச் செய்து நிழலில் உலர்த்திக் கொள்ளவும். இதனைக்கண்ணோய்கண்ணரிச்சல், சுக்கிரன் இவைகளுக்கு முலைப்பாலிலாவது, தேனிலாவது உரைத்துக் கண்ணிலிடவும், (பைஷஜ கல்பம)